# நம் வாழ்வை வண்ணமயமாக்கும் கலைகள்

பாடச்சுமையில் களைத்துப்போகும் பிஞ்சு மனங்களுக்குக் கலைகள் அருமருந்தாக அமைந்து அவர்களது உடலுக்கும் உள்ளத்துக்கும் புத்துணர்ச்சியை நல்கும். சிறுவயதிலிருந்தே பிள்ளைகளுக்குப் பற்பல கலைகளை நாம் அறிமுகப்படுத்தலாம். இசை, நடனம், நாடகம் போன்ற கலைகளில் ஈடுபடும்போது பிள்ளைகளிடையே:

- கற்பனைத்திறனும் படைப்பாற்றலும் பெருகும்
- மன அழுத்தமும் சோர்வும் குறையும்
- தன்னம்பிக்கை வளரும்

கலைகளைப் பிள்ளைகளின் அன்றாட வாழ்வோடு ஒன்றிணைக்கும் உங்களது முயற்சிக்கு இத்தொகுப்பு உறுதுணையாக அமையும்.

## இத்தொகுப்பில் உள்ளடங்கிய நூல்கள்:

அனைத்து உரிமைகளும் காப்புரிமைக்கு உட்பட்டவை. சிங்கப்பூர் : ஆதியா, 2021





**(N1-N2 பிள்ளைகளுக்கு உகந்தது)**

**தலைப்பு: யார் வரைந்த ஓவியம்?**
நூலாசிரியர்: விஜயம்
அமைவிடம்: Children Singapore
குறியீட்டு எண்: Tamil VIJ

ஒரு காட்டில் ஒரு மரம் இருந்தது. அந்த மரத்தில் ஓர் அழகான ஓவியம் தெரிந்தது. "யார் வரைந்த ஓவியம்?" எல்லா விலங்குகளும் யோசித்தன... - பின்பக்க அட்டையிலிருந்து

---

அனைத்து உரிமைகளும் காப்புரிமைக்கு உட்பட்டவை. சிங்கப்பூர் : ஆதியா, 2021




**(K1-K2 பிள்ளைகளுக்கு உகந்தது)**

**தலைப்பு: தாளம் போடு**
நூலாசிரியர்: விஜயம்
அமைவிடம்: Children Singapore
குறியீட்டு எண்: Tamil VIJ

ஆமையாருக்கு வயது நூறு. அதன் பிறந்தநாளை எப்படிக் கொண்டாடலாம்? விலங்குகள் யோசித்தன... - பின்பக்க அட்டையிலிருந்து

# ஆசிரியருக்கான வளங்கள் (N1-N2 பிள்ளைகளுக்கு உகந்தது)
# தலைப்பு: யார் வரைந்த ஓவியம்?

## பிள்ளைகளுடன் செய்யக்கூடிய நடவடிக்கைகள்:

### வாசிப்பதற்கு முன் செய்யக்கூடிய நடவடிக்கை: சின்னஞ்சிறு ஓவியன் நான்!

**நடவடிக்கையின் நோக்கம்**:
இந்த நடவடிக்கை சிறு பிள்ளைகளுக்குத் தங்களுடைய எண்ணங்களை ஓவியங்களின் வழி வெளிப்படுத்த கற்றுக்கொடுக்கும். இதன்வழி சக நண்பர்களின் ஓவியங்களைப் பார்த்து ரசிப்பதோடு அவர்களின் படைப்பாற்றலைப் பார்த்துக் கற்றுக்கொள்ளும் வாய்ப்பும் பிள்ளைகளுக்குக் கிடைக்கும்.

**சின்னஞ்சிறு ஓவியன் நான்!**

1. பிள்ளைகளுக்குக் காகிதத்தையும் வண்ண பென்சில்களையும் வழங்கவும். காகிதத்தில் அவர்களுக்குப் பிடித்த ஓர் ஓவியத்தை வரையச் சொல்லவும். வரையும் ஓவியங்களை மற்றவர்களிடம் காட்டக்கூடாது என்று அவர்களிடம் கூறவும்.
2. எல்லோரும் ஓவியங்களை வரைந்த பின்னர், அவற்றை ஆசிரியரிடம் கொடுக்க வேண்டும். பின் ஆசிரியர் ஓவியங்களை வகுப்பறையில் உள்ள அனைவரிடமும் காட்டலாம்.
3. ஒவ்வொரு ஓவியமும் யார் வரைந்ததாக இருக்கக்கூடும் என்பதைப் பிள்ளைகளைக் கண்டுபிடிக்கச் சொல்லவும்.
4. பிள்ளைகளிடம் அவர்களது நண்பர்களின் கலைத்திறனையும் முயற்சியையும் காண்பித்து அனைவரையும் பாராட்டவும்.

அனைத்து உரிமைகளும் காப்புரிமைக்கு உட்பட்டவை. சிங்கப்பூர்: ஆதியா, 2021




**ஆசிரியர் நூல் தலைப்பைப் பிள்ளைகளிடம் அறிமுகப்படுத்தவும். பின் நூலின் அட்டைப்படத்தை அவர்களிடம் காண்பித்து கீழ் கொடுக்கப்பட்டுள்ளவற்றைக் கலந்துரையாடவும்:**

1. இந்த அட்டையில் என்னென்ன மிருகங்கள் தெரிகின்றன?
2. மரத்தில் உள்ள ஓவியம் யாருடைய ஓவியம் என்று நீங்கள் நினைக்கிறீர்கள்? ஏன்?
3. உங்களிடம் இருக்கும் ஏதேனும் ஒரு திறனைப் பற்றி பகிர்ந்துகொள்ளுங்கள்.

### வாசிப்புக்குப் பின் செய்யக்கூடிய நடவடிக்கை: குரங்கு படம் செய்வோம்!

தேவைப்படும் பொருள்கள்: பழுப்பு நிறத் தாள், வெளிறிய பழுப்பு நிறத் தாள், பசை, கத்திரிக்கோல், கூகுலி கண்கள், கருப்பு மார்க்கர்கள், நீண்ட குச்சி

**செய்யும் முறை**

1. முதலில் பழுப்பு நிறத் தாளில் ஒரு பெரிய வட்டத்தையும் இரண்டு சிறிய வட்டங்களையும் வெட்டவும்.
2. அடுத்தபடியாக வெளிறிய பழுப்பு நிறத் தாளில் மூன்று நீள்வட்டங்களை வெட்டவும். பிறகு, அவற்றை முன்னதாக வெட்டிய பழுப்பு நிற வட்டங்களில் பசையைத் தடவி ஒட்டவும்.
3. படத்தில் உள்ளதைப்போல, குரங்கின் கண்களையும் காதுகளையும் ஒட்டவும். பின், கருப்பு மார்க்கரை வைத்து குரங்கின் மூக்கையும் வாயையும் வரையவும்.
4. இப்போது, இன்னொரு பழுப்பு நிறத் தாளை செவ்வக (rectangular) வடிவில் வெட்டவும். பின், வெளிறிய பழுப்பு நிறத் தாளில் ஒரு நீள்வட்டத்தை வெட்டி அதன் நடுவில் ஒட்டவும். படத்தில் உள்ளதைப்போல குரங்கின் கால்களையும் கைகளையும் வெட்டவும். இதுவே குரங்கின் உடல் ஆகும்.
5. குரங்கின் உடலோடு முன்னதாக உருவாக்கிய முகத்தை பசைகொண்டு இணைக்கவும்.
6. குரங்கின் கைப்பகுதியைச் சற்று மடக்கியபின் அதில் கொஞ்சம் பசையைத் தடவி, ஒரு குச்சியை ஒட்டவும். குரங்கிற்கு ஒரு வாலையும் சேர்த்துக்கொள்ளுங்கள்.



# ஆசிரியருக்கான வளங்கள் (K1-K2 பிள்ளைகளுக்கு உகந்தது) தலைப்பு: தாளம் போடு

## பிள்ளைகளுடன் செய்யக்கூடிய நடவடிக்கைகள்:

### வாசிப்பதற்கு முன் செய்யக்கூடிய நடவடிக்கை:

ஆசிரியர்கள் இந்த விளையாட்டைப் பிள்ளைகளுடன் சேர்ந்து விளையாடலாம். இதன்வழி அவர்கள் பற்பல இசைக்கருவிகளைப் பற்றி தெரிந்துகொள்வார்கள்.

விளையாட்டைத் தொடங்குவதற்கு முன்பு, ஆசிரியர் கீழே குறிப்பிடப்பட்டுள்ள இசைக்கருவிகளின் படங்களை அச்சு எடுத்துக்கொள்ள வேண்டும்.

### இசைக்கருவிகள்


1. நாதஸ்வரம்


2. மத்தளம்


3. கிட்டார்


4. பியானோ


5. ட்ரம்பெட்

வகுப்பில் பிள்ளைகளை ஒரு வட்டமாக அமரவைத்து அவர்களிடம் இசைக்கருவிகளின் படங்களை ஒவ்வொன்றாகக் காட்டவும். அந்தப் படங்களைச் சரியாக அடையாளம் காணச் சொல்லியபின் அனைவரிடமும் அவற்றை அறிமுகம் செய்யவும். ஒவ்வொரு இசைக்கருவியை அறிமுகம் செய்யும்போதும், அதைப் பற்றிய சில சுவாரசியமான தகவல்களைப் பகிர்ந்துகொள்ளவும். பிள்ளைகளுக்கு அந்த இசைக்கருவிகளிலிருந்து எழும் ஒலிகளை அறிமுகப்படுத்த, ஆசிரியர்கள் அதன் தொடர்பான காணொளிகளை வகுப்பில் திரையிடலாம்.

### உதாரணத்திற்கு

1. நாதஸ்வரம் - இது ஒரு பாரம்பரிய இசைக்கருவி. இதைப் பண்டிகை காலங்களில் வாசிக்கலாம். இதை வாசிக்க நாம் பல மூச்சுப் பயிற்சிகளை மேற்கொள்ள வேண்டும்.
2. மத்தளம் - இது ஒரு பாரம்பரிய இசைக்கருவி. இதைப் பலாப்பழ மரத்திலிருந்து செய்வார்கள். இந்த இசைக்கருவியை முழுக்க முழுக்க கையாலும் செய்யலாம். இதைச் செய்து முடிக்க பல மாதங்கள் ஆகும்.
3. கிட்டார் - இது ஒரு ஆங்கில இசைக்கருவி. இது சுமார் 4,000-ஆம் ஆண்டுகளுக்கு முன்பு உருவாக்கப்பட்டது. பெரும்பாலான கிட்டார்களில் ஆறு சரங்கள் இருக்கும்.
4. பியானோ - நவீன பியானோ 1700-இல் இத்தாலியில் பார்டோலோமியோ கிறிஸ்டோஃபோரி (Bartolomeo Cristofori) என்பவரால் கண்டுபிடிக்கப்பட்டது. பியானோவில் 13 வகைகள் உள்ளன.
5. வயலின் - இது உலகில் மிகவும் பழமை வாய்ந்த இசைக்கருவிகளில் ஒன்றாகும். பண்டைய எகிப்திய வரலாற்றில் ஒரு முக்கிய அங்கம் வகித்த இந்த இசைக்கருவி, சுமார் 1922-இல் கண்டுபிடிக்கப்பட்டது. அந்தக் காலக்கட்டத்தில் இதன் இசையைப் பயன்படுத்தி எகிப்திய படைகள் மற்ற நாடுகளுக்குத் தகவல் அல்லது எச்சரிக்கை விடுப்பார்கள்.

அனைத்து உரிமைகளும் காப்புரிமைக்கு உட்பட்டவை. சிங்கப்பூர் : ஆதியா, 2021






ஆசிரியர் நூல் தலைப்பைப் பிள்ளைகளிடம் அறிமுகப்படுத்தவும். பின் நூலின் அட்டைப்படத்தை அவர்களிடம் காண்பித்து கீழ் கொடுக்கப்பட்டுள்ளவற்றைக் கலந்துரையாடவும்:


1. இந்த அட்டையில் என்னென்ன மிருகங்கள் தெரிகின்றன?
2. இந்த மிருகங்கள் வாசிக்கும் இசைக்கருவிகளின் பெயர்கள் என்ன?
3. உங்களுக்கு எந்த இசைக்கருவி பிடிக்கும்?

### வாசிப்புக்குப் பின் செய்யக்கூடிய நடவடிக்கை: ஆட்டம், பாட்டம், கொண்டாட்டம்

**தேவைப்படும் பொருள்கள்:**


மணிகள்


வலிமையான நூல்


சிறிய காகிதத் தட்டு


வண்ணப் பென்சில்கள்





### செய்யும் முறை

1. அனைத்துப் பிள்ளைகளுக்கும் ஒரு காகிதத் தட்டை வழங்கவும். அதன் பின்புறத்தை அவர்களுக்குப் பிடித்தவாறு வடிவமைக்கும்படி கூறவும்.
2. பிறகு காகிதத் துளைக் கருவியைக் கொண்டு (Punch Holder) காகிதத் தட்டைச் சுற்றி சிறிய ஓட்டைகளை அமைக்கவும். இதற்குப் பிள்ளைகள் ஆசிரியர்களின் உதவியை நாடலாம். அதன்பின்னர், ஒவ்வொரு ஓட்டையிலும் நூலைப் பயன்படுத்தி ஒரு மணியைக் கட்டவும்.
3. இப்பொழுது அனைவரும் அவர்களுடைய இசைக்கருவியை இசைத்து விளையாடி மகிழலாம்.

# பரிந்துரைக்கப்படும் நூல்கள்:


**தலைப்பு:** சுவரில் வரையலாமா?
**நூலாசிரியர்:** பிரேமா கோவிந்த்
**பதிப்பாளர்:** சிங்கப்பூர் : கிரிம்சன் எர்த் பதிப்பகம், 2021
**அமைவிடம்:** Children Singapore
**குறியீட்டு எண்:** Tamil PRE
**கதைச் சுருக்கம்:** லீலாவுக்கு வரைய ஆசை. அம்மா அவளுக்கு வரைபடத் தாள்களும் வண்ணப் பென்சில்களும் வாங்கிக் கொடுத்தார். லீலா அப்பாவுடனும் அம்மாவுடனும் வரைந்து மகிழ்ந்தாள். - பின்பக்க அட்டையிலிருந்து




**தலைப்பு:** அபிநயாவின் ஆட்டம்
**நூலாசிரியர்:** விஜயம்
**பதிப்பாளர்:** சிங்கப்பூர் : ஆத்யா, 2019
**அமைவிடம்:** Children Singapore
**குறியீட்டு எண்:** Tamil VIJ
**கதைச் சுருக்கம்:** அபிநயாவுக்கு நடனம் ஆடப் பிடிக்கும். அவள் ஆடிக்கொண்டே நடந்தாள். ஆடிக்கொண்டே பேசினாள். எங்கும் ஆடிக்கொண்டே இருந்தாள். அபிநயாவின் ஆட்டத்தைக் கண்டு ரசிக்கலாமா? - பின்பக்க அட்டையிலிருந்து




**தலைப்பு:** பொம்மலாட்டம்
**நூலாசிரியர்:** விஜயம்
**பதிப்பாளர்:** சிங்கப்பூர் : ஆத்யா, 2022
**அமைவிடம்:** Children Singapore
**குறியீட்டு எண்:** Tamil VIJ
**கதைச் சுருக்கம்:** பொம்மலாட்டம் என்பது ஒரு பாரம்பரியக் கிராமியக் கலை. பொம்மைகளைக் கொண்டு புராணக் கதைகளை மக்களுக்கு எடுத்துக் கூறுவார்கள். பொம்மைகளின் ஆட்டத்தைக் காண நீங்களும் தயாரா? - பின்பக்க அட்டையிலிருந்து




அனைத்து உரிமைகளும் காப்புரிமைக்கு உட்பட்டவை.
நூல்கள் குறித்த மேல் விவரங்களுக்கு எங்களது இணைய நூற்பட்டியைலப் பார்வையிடுங்கள்.
**https://catalogue.nlb.gov.sg/**

